# நுகர்வோர் சேவைகள் அமைச்சு உங்களை வரவேற்கிறது

ஒன்ராறியோவில் உள்ள ஒரு நுகர்பவர் என்ற விதத்தில் நீங்கள் உங்களுடைய உரிமைகளைப் புரிந்து கொள்வதற்கு உதவுவதற்காகவே இங்கு நாம் இருக்கிறோம்.

எமது சேவைகள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழி ஆகியவற்றில் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது என்றபோதிலும், இவ்விரு மொழிகளிலும் உங்களால் பேச முடியாது என்றால், அவ்வாறு பேசக் கூடிய ஒரு நண்பர் அல்லது குடும்ப அங்கத்தவரை உங்கள் சார்பாக எங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுங்கள்.

எமது இணையத் தளத்தில் இருந்து நீங்கள் தகவல் அறியக் கூடிய சில விடயத் தலைப்புகள் கீழே தரப்பட்டு உள்ளன:

- கொடுப்பனவு அறவிடும் முகவர் நிலையம் ஒன்று எனக்குத் தொல்லை தருமென்றால் நான் என்ன செய்யலாம்?
- மரணச் சடங்கு ஒன்றுக்காக நான் முன்கூட்டியே பணம் செலுத்தி விட்டேன். நான் எனது எண்ணத்தை மாற்றிக் கட்டிய பணத்தை மீளப் பெற முடியுமா?
- எனது தனியுரிமைக் கூட்டு இல்லம் நிர்வாக சபை கூறுவதன்படி நான் செல்லப் பிராணி (நவ) ஒன்றை வைத்திருக்க முடியாது. இது சட்டபூர்வமான ஒரு கட்டுப்பாடு ஆகுமா?
- நன்கொடை அட்டைகள் பாதுகாப்பு உள்ளனவா?
- வீடு ஒன்றை வாங்குதல் பற்றி நான் அறிந்து இருக்க வேண்டியன எவை?
- அடையாளத் திருட்டு நடைபெறாமல் நான் என்னை எப்படிக் காத்துக் கொள்ள முடியும்?
- மோட்டார் வாகனம் ஒன்றை வாங்குதல் பற்றி நான் என்ன அறிந்து இருக்க வேண்டும்?
- சம்பள நாள் கடன் வழங்குவோர் அறவிட அனுமதிக்கப்பட்டு உள்ள வட்டியின் அளவு என்ன?
- ஏமாற்றுத் திட்டங்கள் மற்றும் மோசடிகள் நடைபெறாமல் நான் என்னை எப்படிக் காத்துக் கொள்ள முடியும்?
- பிரயாணச் சேவைகள் வாங்குதல் பற்றி நான் என்ன அறிந்து இருக்க வேண்டும்?

உதவிகரமான தகவல் துணுக்குகள் நிறைய அடங்கிய புத்திசாதுரியமான நுகர்வோர் நாட்காட்டி ஒன்றையும் நாங்கள் தயாரித்து வழங்குகிறோம். புத்திசாதுரியமான நுகர்வோர் நாட்காட்டியின் உங்கள் இலவசப் பிரதியினைத் தமிழில் பெற்றுக் கொள்ளுங்கள்.

புத்திசாதுரியமான ஒரு நுகர்பவராக இருங்கள்…இதற்கு நாம் உதவமுடியும். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**www.ontario.ca/consumerservices**